முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

மட்டம் 02 பரீட்சை – 2026 யூலை

(2801) நிதி மற்றும் கிரயக் கணக்கீடு

(Financial & Cost Accounting)

2026-07-25
காலை
[8.45 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம்*** *: வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
  விடையெழுத : 03 மணித்தியாலங்கள்

  பக்கங்கள் : 10
  வினாக்கள் : 07

  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த அதே **ஒரு மொழியிலேயே விடையளித்தல்** வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை **மாத்திரம்** அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச்சொல் செவ்வை நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **வினைச்சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் **வரைவிலக்கணத்தின்** அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (7) *100 புள்ளிகள்.*

<u>பகுதி A</u>

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.5** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

1.1 ஒரு கம்பனியின் நிதி நிலையை அளவிடுவதுடன் நேரடியாகத் தொடர்புடைய நிதிக் கூற்றுக்களின் ஒரு கூறு (element):

(1) வருமானம் (2) பரீட்சை மீதி

(3) செலவினங்கள் (4) பரிப்புகள் (02 புள்ளிகள்)

1.2 பின்வரும் கிரயவியல் முறைகளைக் கவனத்திற் கொள்க:

(a) வேலைக் கிரயவியல் (Job Costing)

(b) ஒப்பந்தக் கிரயவியல் (Contract Costing)

(c) செயன்முறைக் கிரயவியல் (Process Costing)

மேலுள்ளவற்றில், குறிப்பான (specific) கட்டளைக் கிரயவியல் முறை/முறைகளாவன:

(1) **(c)** மாத்திரம். (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம். (4) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (02 புள்ளிகள்)

1.3 பின்வரும் தகவல்கள் 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட அல்பா கம்பனி** தொடர்பானவையாகும்:

	கிரயக் கணக்குகளின்படி (ரூ.)	**நிதிக் கணக்குகளின்படி (ரூ.)**
ஆரம்ப இருப்புகள்:		
மூலப்பொருள்	64,000	73,000
முடிவுப் பொருள்கள்	82,000	69,000
இறுதி இருப்புகள்:		
மூலப்பொருள்	56,000	68,000
முடிவுப் பொருள்கள்	90,000	87,000

கிரயக் கணக்குகளின்படி இலாபம் ரூ. 454,000/- ஆக இருப்பின், நிதிக் கணக்குகளின்படி இலாபமாக அமைவது:

(1) ரூ. 441,000/-. (2) ரூ. 467,000/-. (3) ரூ. 461,000/-. (4) ரூ. 447,000/-.

(02 புள்ளிகள்)

1.4 **வரையறுக்கப்பட்ட X கம்பனி** 2023 ஏப்ரல் 01 இல் ரூ. 5,000,000/- கிரயத்தில் கொள்வனவு செய்த ஒரு மோட்டார் வாகனத்தை 2025 யூன் 30 இல் ரூ. 4,500,000/- இற்கு விற்பனை செய்தது. மோட்டார் வாகனத்தின் மதிப்பிடப்பட்ட பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாக உள்ளதுடன் கம்பனி அதன் மோட்டார் வாகனங்களை கிரயத்தில், நேர்கோட்டு முறையில் தேய்மானஞ் செய்கிறது. மோட்டார் வாகனத்தின் விற்பனை மீதான இலாபம்:

(1) ரூ. 750,000/-. (2) ரூ. 1,750,000/-.

(3) ரூ. 2,000,000/-. (4) ரூ. 3,000,000/-.

(02 புள்ளிகள்)

1.5 பின்வரும் தகவல்கள் ஓர் உற்பத்திக் கம்பனியின் கடந்த ஆண்டிற்கான ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

	பாதிடப்பட்டது	**உண்மையானது**
உற்பத்தி மேந்தலைகள் (ரூ.)	2,000,000	1,900,000
நேர் ஊழிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை	100,000	90,000

உற்பத்தி மேந்தலைகள்:

(1) ரூ. 100,000/- குறைவான உறிஞ்சல். (2) ரூ.100,000/- மேலதிக உறிஞ்சல்.

(3) ரூ. 200,000/- குறைவான உறிஞ்சல். (4) ரூ.200,000/- மேலதிக உறிஞ்சல்.

(02 புள்ளிகள்)

1.6 தொடக்கம் **1.10** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

1.6 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இலுள்ள இரண்டு (02) ஏற்பாடுகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

1.7 பொருள் கட்டுப்பாட்டின் (material control) மூன்று (03) நோக்கங்களைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

1.8 "நிதிக் கணக்கீடு" மற்றும் "கிரயக் கணக்கீடு" ஆகியவற்றுக்கிடையிலான மூன்று (03) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

1.9 **X** உம் **Y** உம் **மூன் பங்குடமை**யின் பங்காளர்கள் ஆவர். அவர்கள் இலாப, நட்டங்களை முறையே 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். **Z** என்பவர் 2025 ஏப்ரல் 01 இல் ஒரு புதிய பங்காளராக இணைந்து கொண்டார். அதன் பின்னர் பங்காளர்கள் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்ளத் தீர்மானித்தனர்.

X, Y ஆகியோரின் அர்ப்பணிப்பு விகிதத்தைக் (sacrificing ratio) கணிப்பிடுக. (03 புள்ளிகள்)

1.10 **வரையறுக்கப்பட்ட மெக் கம்பனி** தனது இருப்புகளை முதல் உள்ளே - முதல் வெளியே (FIFO) முறையைப் பயன்படுத்தி மதிப்பிடுகிறது. பின்வரும் தகவல்கள் இருப்பு தொடர்பான கம்பனியின் பதிவேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

திகதி	விவரம்	அலகு விலை (ரூ.)	அளவு (அலகுகளில்)
01.03.2026	ஆரம்ப மீதி	58	150
08.03.2026	கொள்வனவுகள்	45	250
15.03.2026	விற்பனைகள்	-	200
24.03.2026	கொள்வனவுகள்	52	160

2026 மார்ச் 31 இல் இருப்பின் பெறுமதியைக் கணிக்க. (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

வினா 02

ரவி என்பவர் தனியுடமை வியாபாரமான **"சிலோன் டேஸ்ட்"** கம்பனியின் உரிமையாளராவார். அவர் விவசாயிகளிடமிருந்து மசாலாப் பொருள்களை வாங்கி அவற்றைப் பதப்படுத்தி, பெறுமதி சேர்த்து முகவர்கள் ஊடாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்.

சிலோன் டேஸ்ட் இன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு: (ரூ.)

	2026 மார்ச் 31	2025 ஏப்ரல் 01
இருப்பு	1,935,000	1,974,500
வியாபார வருமதிகள்	950,700	829,200
காசு மற்றும் வங்கி மீதிகள்	?	1,276,500
உரிமையாண்மை (மூலதனம்)	?	2,935,200
வியாபார சென்மதிகள்	2,100,000	1,145,000

2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் மேலதிகத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன:

(1) பதிவுகளின்படி, **சிலோன் டேஸ்ட் கம்பனி** ஆண்டின் காலப்பகுதியில் பின்வரும் பரிவர்த்தனைகளை கடனடிப்படையில் மேற்கொண்டிருந்தது:

	ரூ.
விற்பனைகள்	35,000,000
கொள்வனவுகள்	21,000,000

(2) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் பின்வரும் காசுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன:

	ரூ.
அலுவலக வாடகை	1,240,000
விநியோகச் செலவினங்கள்	1,680,000
வாகனப் பராமரிப்புச் செலவினங்கள்	302,400
வாகன வாடகை	960,000
அலுவலகப் பராமரிப்புச் செலவினங்கள்	44,000
மின்சாரமும் நீரும்	400,000
சம்பளங்கள்	4,200,000
ரவி எடுத்த காசு - அவரது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக	1,200,000

(3) 2026 மார்ச் மாதத்திற்கான மின்சார மற்றும் நீர்ச் செலவினங்கள் ரூ. 100,000/- ஆக இருந்ததுடன் அது 2026 ஏப்ரலில் தீர்ப்பனவு செய்யப்பட்டது.

நீங்கள் செய்ய வேண்டியவை:

சிலோன் டேஸ்ட் கம்பனிக்காக பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக:**

(a) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம் (07 புள்ளிகள்)

(b) 2026 மார்ச் 31 இலான மூலதன (உரிமையாண்மை) மீதி (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 03

அஷித்த, பந்து மற்றும் **சரித்த** ஆகியோர் **ABC அஸோசியேற்ஸ்** என்ற பங்குடமையின் பங்காளர்கள் ஆவர்.

(1) பங்குடமை உடன்படிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

- **அஷித்த, பந்து** மற்றும் **சரித்த** ஆகியோருக்கிடையில் இலாப, நட்டங்கள் முறையே 2 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிரப்படுகின்றன.
- **அஷித்த, பந்து** மற்றும் **சரித்த** ஆகியோர் பங்குடமையை முகாமை செய்வதற்காக முறையே ரூ.300,000/-, ரூ.200,000/-, ரூ.150,000/- மாதாந்தத் சம்பளம் பெற உரித்துடையவர்கள்.
- 2025 ஏப்ரல் 01 இலான ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகள் மீது ஆண்டிற்கு 10% வட்டியைப் பெற பங்காளர்கள் உரித்துடையவர்கள்.
- 2025 ஏப்ரல் 01 இலான ஆரம்ப நடைமுறைக் கணக்கு மீதிகளுக்கு ஆண்டிற்கு 5% வட்டியைப் பெற பங்காளர்கள் உரித்துடையவர்கள்.

(2) பின்வரும் மீதிகள் 2025 ஏப்ரல் 01 இல் பங்குடமையின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

(ரூ.'000)

	வரவு	செலவு
மூலதனக் கணக்குகளின் மீதிகள்:		
அஷித்த		200,000
பந்து		160,000
சரித்த		100,000
நடைமுறைக் கணக்குகளின் மீதிகள்:		
அஷித்த		20,000
பந்து		10,000
சரித்த		5,000

(3) 2026 மார்ச் 31 இல், **சரித்த** பங்குடமையிலிருந்து விலகத் தீர்மானித்திருந்ததுடன், **அஷித்தவும் பந்துவும்** இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டு, அதே பெயரிலேயே பங்குடமையைத் தொடர்ந்து நடத்திச் செல்ல இணங்கியிருந்தனர்.

(4) பங்குடமையின் நன்மதிப்பு 2026 மார்ச் 31 இல் ரூ. 18,000,000/- என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இதனை நன்மதிப்புக் கணக்கொன்றைப் பேணாது பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாகச் சீராக்கம் செய்தல் வேண்டும்.

(5) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் நிகர இலாபம் ரூ. 120,000,000/-.

(6) **சரித்தவுக்கான** அனைத்து நிலுவைகளும் 2026 ஏப்ரல் 01 இல் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியவை:

2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ABC அஸோசியேற்ஸ்** இன் பின்வருவனவற்றைத் **தயாரிக்க:**

(a) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் (06 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04

பின்வரும் தகவல்கள் 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சவுத் ரோவிங் கிளப்** இன் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இந்தக் **கிளப்** 2022 சனவரி 01 இல் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது.

(1) ஆண்டின் காலப்பகுதியில் பின்வரும் செலவினங்கள் உறப்பட்டதுடன், வருமானங்கள் ஈட்டப்பட்டன:

	ரூ.
விற்பனைகள் - உணவகம்	2,544,000
கொள்வனவுகள் - உணவகம்	1,526,400
சம்பளங்களும் கூலிகளும்	1,440,000
மின்சாரமும் நீரும்	780,000
வாடகைக் கொடுப்பனவுகள்	540,000
கிளப் இன் நானாவிதச் செலவினங்கள்	75,000

உணவகத்துடன் தொடர்புடைய செலவினங்களில் 20% ஆனவை சம்பளங்களும் கூலிகளும், மின்சாரமும் நீரும் மற்றும் வாடகைச் செலவினங்களுக்கானதாகும்..

(2) **கிளப்** இன் சொத்துக்கள் பின்வருமாறு:

(ரூ.)

	2025 டிசெம்பர் 31	2025 சனவரி 01
இருப்பு - உணவகம்	285,000	175,000
அலுவலக உபகரணம் – உணவகம் (கிரயத்தில்)	768,000	768,000
பிற அலுவலக உபகரணம் (கிரயத்தில்)	2,500,000	1,500,000
தளபாடம் – உணவகம் (கிரயத்தில்)	300,000	300,000
பிற தளபாடம் (கிரயத்தில்)	250,000	250,000
நிலையான வைப்புகள் மீதான முதலீடு	805,000	750,000

(3) நிலையான வைப்புகள் மீதான முதலீடுகள் தன்னியக்கமாக வட்டியுடன் சேர்த்து புதுப்பிக்கப்படுகின்ற அடிப்படையில் வங்கிகளில் செய்யப்பட்டுள்ளதுடன், ஆண்டின் காலப்பகுதியில் எவ்வித புதிய முதலீடுகளும் செய்யப்படவில்லை.

(4) 2025 சனவரி 01 இல், **கிளப்** இல் 120 அங்கத்தவர்கள் இருந்தனர். 2025 சனவரி 01 இல், 25 அங்கத்தவர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணங்களைச் செலுத்தியிருக்க வில்லை என்பதுடன் 5 அங்கத்தவர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணங்களை முன்கூட்டியே செலுத்தியிருந்தனர். 2025 டிசெம்பர் 31 இல், 4 அங்கத்தவர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தியிருக்கவில்லை என்பதுடன் 8 அங்கத்தவர்கள் 2026 ஆம் ஆண்டிற்கான தமது அங்கத்துவக் கட்டணங்களை முன்கூட்டியே செலுத்தியிருந்தனர். ஆண்டின் காலப்பகுதியில் அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் எதுவுமில்லை.

(5) வருடாந்த அங்கத்துவக் கட்டணம், அங்கத்தவர் ஒருவருக்கு ரூ. 25,000/- ஆகும்.

(6) 2025 யூலை 01 இல் **சவுத் ரோவிங் கிளப்** இன் அலுவலகப் பாவனைக்காக ரூ.1,000,000/- பெறுமதியான அலுவலக உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டது.

(7) பொறி மற்றும் உபகரணங்கள் பின்வரும் வீதங்களைப் பயன்படுத்தி, கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும்:

அலுவலக உபகரணம்	20%
தளபாடம்	15%

நீங்கள் செய்ய வேண்டியவை:

2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **சவுத் ரோவிங் கிளப்** இன் பின்வருவனவற்றைத் **தயாரிக்க:**

(a) அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கு. (03 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு. (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 05

(A) **வரையறுக்கப்பட்ட ரோசா கம்பனியின் உற்பத்திப் பொருள் Y** தொடர்பான பின்வரும் தகவல்களைக் கவனத்திற் கொள்க:

வருடாந்தத் கேள்வி	9,000 அலகுகள்
அலகொன்றின் கொள்வனவு விலை	ரூ. 10/-
கட்டளையிடல் கிரயம்	கட்டளை ஒன்றிற்கு ரூ. 200/-
அலகொன்றிற்கான வருடாந்த நிறுத்திவைத்தல் கிரயம்	ரூ. 2.50
காத்திருப்புக் காலம் (Lead time)	2 – 4 மாதங்கள்
பாவனை	500 – 1,000 அலகுகள்

நீங்கள் செய்ய வேண்டியவை:

உற்பத்திப்பொருள் Y இன் பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக**:

(a) சிக்கனக் கட்டளைக் கணியம் (EOQ) (02 புள்ளிகள்)

(b) மறு கட்டளை மட்டம் (02 புள்ளிகள்)

(c) உயர்ந்தபட்ச இருப்பு மட்டம். (02 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட சாலு பிலி (தனியார்) கம்பனி** என்பது ஓர் ஆடைத் தயாரிப்புக் கம்பனி ஆகும்.

2026 மே மாத இறுதி வாரத்திற்கான கம்பனியின் ஓர் ஊழியர் தொடர்பான பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன:

நாளொன்றின் சாதாரண வேலை மணித்தியாலங்கள்	9 மணித்தியாலங்கள் (ஒரு வாரத்தில் 5 வேலை நாட்கள்)
மணித்தியாலமொன்றிற்கான அடிப்படை ஊழிய வீதம் (labour rate)	ரூ. 375/-
ஓர் அலகை உற்பத்தி செய்ய எடுக்கும் நியம நேரம்	15 நிமிடங்கள்
நேரச் சேமிப்புக்கான மிகையூதியம்	அடிப்படை ஊழிய வீதத்தில் சேமிக்கப்பட்ட நேரத்தில் 80%
வாரத்தின்போது உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை	300 அலகுகள்

நீங்கள் செய்ய வேண்டியது:

இறுதி வாரத்திற்கான ஊழியரின் மொத்த சம்பாத்தியத்தைக் **கணிக்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 06

பின்வரும் தகவல்கள் 2025 டிசெம்பர் மாதத்திற்கான **வரையறுக்கப்பட்ட PQR (தனியார்) கம்பனி**யின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இக்கம்பனி இரண்டு உற்பத்திப் பிரிவுகளையும் (**P** மற்றும் **A**), ஒரு சேவைப் பிரிவையும் கொண்டுள்ளது.

(1) கம்பனி 2025 டிசெம்பர் மாதத்திற்கான பின்வரும் உற்பத்தி மேந்தலைகளை மதிப்பிட்டுள்ளது:

கிரய உருப்படி	**கிரயம் (ரூ.)**
வாடகை	60,000
மின்சாரம்	45,000
பணியாளர் நலன்	40,000
இயந்திரம் மீதான தேய்மானம்	20,000

(2) உங்களுக்குப் பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

	உற்பத்திப் பிரிவுகள்		**சேவைப் பிரிவு**
	பிரிவு P	**பிரிவு A**	
நேரில் மூலப்பொருள்கள் (ரூ.)	80,000	50,000	20,000
நேரில் ஊழியம் (labour) (ரூ.)	30,000	7,000	3,000
தரைப் பரப்பு (சதுர அடி)	2,000	1,500	500
மின் பாவனை (கிலோவாற்று)	300	100	50
ஊழியர் எண்ணிக்கை	250	200	50
இயந்திரப் பெறுமதி (ரூ.)	500,000	300,000	200,000
நேர் ஊழிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை	2,500	1,250	-
கிரயப் பகிர்வு – **சேவைப் பிரிவு**	55%	45%	-
ஓர் உற்பத்திப் பொருளுக்குத் தேவையான நேர் ஊழிய மணித்தியாலங்களின் எண்ணிக்கை	2	1	-

(3) ஓர் உற்பத்திப் பொருளுக்கான மதிப்பிடப்பட்ட நேர் கிரயங்கள் பின்வருமாறு:

ஓர் உற்பத்திப் பொருளுக்கு	**ரூ.**
நேர் மூலப்பொருள்	250
நேர் ஊழியம் (labour)	120
முதன்மைக் கிரயம்	**370**

நீங்கள் செய்ய வேண்டியவை:

(a) ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் ஒரு கூற்றைத் **தயாரிக்க.** (07 புள்ளிகள்)

(b) ஓர் உற்பத்திப் பொருளின் மதிப்பிடப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயத்தைக் **கணிக்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா 07

2026 மார்ச் 31 இல் **வரையறுக்கப்பட்ட பாத் (தனியார்) கம்பனியின்** பரீட்சை மீதி பின்வருமாறு:

(ரூ.'000)

	வரவு	**செலவு**
குறிப்பிடு மூலதனம் (300,000 சாதாரண பங்குகள்)		30,000
2025 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம்		6,834
2025 ஏப்ரல் 01 இல் பொது ஒதுக்கம்		3,200
பொறி மற்றும் **உபகரணம் - கிரயத்தில்:**		
மோட்டார் வாகனங்கள்	25,000	
இயந்திரம்	24,000	
தளபாடமும் பொருத்துகளும்	1,500	
2025 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம்:		
மோட்டார் வாகனங்கள்		3,125
இயந்திரம்		3,000
தளபாடமும் பொருத்துகளும்		300
2026 மார்ச் 31 இல் தொக்கு - கிரயத்தில்	2,902	
வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள்	4,990	2,093
கையிலும் வங்கிகளிலும் உள்ள காசு	15,757	
12% தனிச்சங்கள் (25,000 - ஒவ்வொன்றும் ரூ. 100/- விலையில்)		2,500
விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கு		3,000
விற்பனைகள்		46,464
விற்பனைக் கிரயம்	17,957	
காப்புறுதி	150	
சம்பளங்களும் கூலிகளும்	1,900	
மின்சாரமும் நீரும்	400	
அலுவலக வாடகை	900	
பிற நிருவாகச் செலவினங்கள்	800	
விற்பனைத் தரகு	1,400	
விளம்பரப்படுத்தல்	600	
பயணம் மற்றும் போக்குவரத்துச் செலவினங்கள்	900	
பிற விநியோகச் செலவினங்கள்	296	
தனிச்ச வட்டி	150	
பிற நிதிச் செலவினங்கள்	189	
செலுத்திய வருமான வரி	725	
	100,516	**100,516**

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2026 மார்ச் 31 இலான தொக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூ. 150,000/- பெறுமதியான தொக்குகள் முற்றாகச் சேதமடைந்திருந்தமை 2026 ஏப்ரல் 02 இல் கண்டறியப்பட்டது.

(2) 2026 மார்ச் 01 இல், கம்பனி ஒவ்வொன்றும் ரூ. 100/- பெறுமதியான 25,000 சாதாரண பங்குகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியிருந்த நிலையில் 30,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன. பங்குகள் 2026 மார்ச் 31 இல் ஒதுக்கீடு (allotted) செய்யப்பட்டதுடன், மிகைப் பங்குகளுக்கான (excess shares) காசு அடுத்த நாள் திருப்பியனுப்பப்பட்டது. பெறப்பட்ட மொத்தக் காசும் விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு (application and allotment account) செலவு வைக்கப்பட்டது. அது தவிர இந்த விடயம் தொடர்பில் வேறெந்தப் பதிவுகளும் செய்யப்படவில்லை.

(3) தனிச்சங்கள் மீது, ஆண்டின் இரண்டாவது பாதிக்குப் பொருத்தமான வட்டி 2026 மார்ச் 31 இற்குள் ஒதுக்கப்படவோ அல்லது செலுத்தப்படவோ இல்லை.

(4) பொறி மற்றும் உபகரணமானது கிரயத்தில், நேர்கோட்டு முறையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் பின்வருமாறு:

மோட்டார் வாகனங்கள்	4 ஆண்டுகள்
இயந்திரம்	8 ஆண்டுகள்
தளபாடமும் பொருத்துகளும்	5 ஆண்டுகள்

(5) பின்வரும் அட்டுறுக்களும் முன்கூட்டியே செலுத்தப்பட்ட செலவினங்களும் 2026 மார்ச் 31 இலான ஏடுகளில் கணக்கிற் கொள்ளப்பட வேண்டும்:

முன்கூட்டியே செலுத்தப்பட்ட காப்புறுதி : ரூ. 16,000/-

செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் : ரூ. 95,000/-

(6) 2026 மார்ச் 31 இலான வியாபார வருமதிகளில் 10% வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேணப் பணிப்பாளர் சபை தீர்மானித்தது.

(7) வரிமதிப்பாண்டு 2025/26 இற்கான வருமான வரிப் பரிப்பு ரூ. 950,000/- என மதிப்பிடப்பட்டதுடன் ஆண்டின் காலப்பகுதியில் கம்பனி காலாண்டு வருமான வரித் தவணைக் கட்டணங்களாக ரூ.725,000/- இனைச் செலுத்தியிருந்தது.

(8) ஆண்டின் காலப்பகுதியில் பொது ஒதுக்கத்திற்காக ரூ. 500,000/- ஐ மாற்றுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது.

(9) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக பணிப்பாளர் சபையால் 2026 மே 30 இல் அதிகாரம் அளிக்கப்பட்டது.

நீங்கள் செய்ய வேண்டியவை:

முகாமையின் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட பாத் (தனியார்) கம்பனியின்** பின்வருவனவற்றைத் **தயாரிக்க:**

(a) 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் முற்றடக்க வருமானக் (முற்றடக்க வருமானக்) கூற்று. (13 புள்ளிகள்)

(b) 2026 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

மட்டம்	செயல் வினைச்சொல்	வரைவிலக்கணம்	மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள்
நினைவிற் கொள்ளல் உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக் கருக்கள், அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல்	அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify)	யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல்	தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல்
	வரையறுக்க (Define)	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல்
	ஏற்பிசைவு செய்க (Recognize)	முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு	முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல்
	குறிப்பிடுக/ கூறுக (State)	தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு	பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல்
	பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List)	பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர்	பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல்
	பதிவு செய்க (Record)	ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல).	தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல்
விளங்கிக் கொள்ளல் தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல்	கட்டியெழுப்புக (Construct)	கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல்	வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல்
	வேறுபடுத்துக (Differentiate)	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல்	எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல்
	கலந்துரையாடுக / ஆராய்க (Discuss)	ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல்	பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல்
	விவரிக்க (Explain)	எதையாவது பெரியளவில் விரிவாக தெளிவுபடுத்தல்	தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல்
	எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க (Illustrate)	ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல்	பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல்
	உட்பொருளை விளக்குக (Interpret)	தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல்	உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல்
	விளக்குக (Describe)	ஏதாவதொன்றின் விரிவான விளக்கம்	கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல்
	பொழிப்பாக்குக (Summarise)	பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று	பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல்
பிரயோகித்தல் கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது..	பிரயோகிக்க (Apply)	ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல்	ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல்
	கணிக்க/ கணிப்பீடு செய்க (calculate)	கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல்	ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல்
	தீர்மானிக்க (Determine)	ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல்	கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிவு செய்தல்
	செயல் விளக்கமளிக்க (Demonstrate)	ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல்	கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல்
	தயாரிக்க (Prepare)	பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல்
	பயன்படுத்துக (Use)	ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல்	தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல்
	முன்வைக்க (Present)	தகவல்களை பயனுறுதிமிக்க வகையில் பகிர்தல்	பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல்
பகுப்பாய்வு தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல்	பகுப்பாய்வு செய்க (Analyse)	ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல்	சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல்
	ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல்	பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல்
	பிரித்தறிக (Distinguish)	தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல்	பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல்
	பரீட்சிக்க / சோதிக்க (Examine)	ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல்	ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல்
	கோடிட்டுக் காட்டுக (Outline)	பிரதான விடயங்களின் பொழிப்பு	பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல்
	நடத்துக (Conduct)	ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல்
	அறிக்கையிடுக (Report)	கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு	பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல்
மதிப்பீடு தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படை யில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல்	ஆலோசனை வழங்குக (Advise)	யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல்	பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல்
	மதிப்பீடு செய்க (Evaluate)	பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு	தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்பை மதிப்பிடுதல்
	அமைக்குக (Formulate)	ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி	நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல்
	பரிந்துரை செய்க (Recommend)	பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல்	தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல்
உருவாக்குதல் ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல்	உருவாக்குக (Create)	புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல்	அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல்
	மதிப்பிடுக (Assess)	தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல்	கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல்
	விருத்தி செய்க (Develop)	ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக் கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம்	காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல்
	முன்மொழிக (Propose)	கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல்	ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல்
	இணைப்பாக்கம் செய்க (Synthesis)	ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல்	பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல்
	வடிவமைக்குக (Design)	ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல்	ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல்
	தொகுக்குக (Compile)	பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல்	சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல்